

நேற்று (14.07.2023) சென்னை, குறளகம் கைத்தறி ஆணையரக அலுவலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில், கைத்தறி துறை மற்றும் கோஆப்டெக்ஸ் நிர்வாக செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கைத்தறி - கோ-ஆப்டெக்ஸ் நிர்வாக செயல்பாடுகள் குறித்து ஆய்வு:

# கைத்தறித் துணிகளை அதிக அளவில் சந்தைப்படுத்தப்படும்!

### அமைச்சர் ஆர்.காந்தி தகவல்!

சென்னை, ஜூலை 15-

2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சட்டமன்றப் பேரவை அறிவிப்புகளில், செயலாக்கத்தில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்கவும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி உரிய அறிவுரைகள் துறை அலுவலர்களுக்கு வழங்கினார்.

நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கி, அவர்கள் பெற்று வரும் கூலியினை கணிசமான அளவில் உயர்த்தி அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும், கைத்தறி துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் 1) உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள், 2) சந்தை ஊக்குவிப்பு திட்டங்கள், 3) நெசவாளர் நலத்திட்டங்கள் மற்றும் 4) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் மீதான மேல்நடவடிக்கை குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கி வரும் அரசின் சீரிய திட்டமான சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்தினை பொங்கல் 2024க்கு செயல்படுத்த அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி தொடர்பான பணிகளை சங்கங்களில் உடனே துவக்கி குறித்த காலத்திற்குள் இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றி தரமான சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அரசின் மற்றொரு சீரிய திட்டமான பள்ளி மாணாக்கர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடைகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது.

கைத்தறி நெசவின் பாரம்பரியத்தையும் அதன் அடிப்படைத் தன்மையையும் பாதுகாக்கும் வகையில் இயற்றப்பட்ட கைத்தறி இரக உற்பத்தி ஒதுக்கீடு சட்டம் 1985இன் கீழ் கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை தடை செய்யும் வகையில் மண்டல வரியாக பறக்கும் படைகள் அமைத்து தொடர் ஆய்வு மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், கைத்தறி துறையின் உள்கட்டமைப்பினை மேம்படுத்தி கைத்தறி துணிகளை அதிக அளவில் சந்தைப்படுத்தும் நோக்குடன் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான 10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் அமைக்கும் திட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் அமைக்கப்படவுள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பட்டு கைத்தறி பூங்கா தொடர்பான பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு நடப்பு நிதியாண்டிற்குள் நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில்

1) நெசவாளர்களுக்கென 100 மருத்துவ முகாம்கள் நடத்துதல்,

2) நெசவாளர்களுக்கு அனைத்து துறைசார் நலத்திட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், 3) கல்லூரிகளில் கைத்தறி விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்,

4) முத்ரா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் மற்றும் 5) நெசவாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் மரம்நடும் விழாக்கள் நடத்துதல் உள்ளிட்ட திட்ட பணிகளை நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் சிறப்புடன் செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 2023-24 நடப்பு ஆண்டிற்கு ரூ.400 கோடி விற்பனை இலக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான புதிய வியாபார நடவடிக்கைகளாக, கோஆப்டெக்ஸ் நிறுவனம்மின் வணிகம் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி மேம்பாடு போன்ற நடவடிக்கைகள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை இலக்கை அடைய புதிய வணிக உத்திகளை வகுத்து செயல்படுமாறு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன், கைத்தறி துறை அலுவலர்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை - நங்கநல்லூரில் நேரு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளான கல்வி வளர்ச்சி நாள் விழா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்பித்து தமிழ்நாடு அரசின் பொது நூலகங்களுக்கு 7,740 புத்தகங்கள் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த 2017-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக பொறுப்பேற்றத்திலிருந்தும், 2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றப் பிறகும், தன்னைச் சந்திக்க வருபவர்கள், பூங்கொத்துகள், பொன்னாடைகளைத் தவிர்த்து, அன்பின் பரிமாற்றத்திற்கு அடையாளமாக புத்தகங் களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதன்படி, தன்னைச் சந்திக்க வந்த பலரும் வழங்கிய ஒன்றரை லட்சம் அறிவார்ந்த புத்தகங்களை தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நூலகங்களுக்கும், புத்தகங்கள் கோரிக் கடிதம் அளித்தவர்களுக்கும், அமைப்புகளுக்கும் முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி இன்று (15.7.2023) சென்னை, நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ள விழாவில், முதலமைச்சர் அவர்கள், சமீபகாலங்களில் தனக்கு வழங்கப்பட்ட 7,740 புத்தகங்களை, தமிழ்நாடு அரசின் பொது நூலகங்களுக்கு வழங்குகிறார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன், எம்.பி. - அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. - முன்னிலை! வானவில் விஜய் தலைமை!

# மாவட்ட மாணவர் அணி சார்பில் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

### மயிலம் பொம்மபுரம் ஆதினம் சிவஞான பாலய சுவாமிகள் வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 15-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதியில், மாவட்ட மாணவர் அணி சார்பில் கலைஞர்100, 16வது நிகழ்ச்சியாக "ஒளி காட்டும் அர்ச்சகர் உயர்வாகட்டும் - உணர்வோடு கலைஞரின் புகழ் பாடட்டும்" எனும் தலைப்பில் 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், சிங்காரம் பிள்ளை பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், வானவில் விஜய் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், தலைமை செயற்குழு உறுப்பினரும், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் பா.ரங்கநாதன், பகுதிக்கழச் செயலாளர்கள் கூ.பி.ஜெயின், வே.வாசு, சாவித்திரி வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி., சுதா தீனதயாளன், லதா வாசு, ஜி.ஜே.பிரபு, ஜே.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார். எம். சுரேஷ், வரவேற்று பேசுகின்றார்.

இந்நலத்திட்ட விழாவில் கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதினம் சிவஞான பாலய சுவாமிகள், அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இவ்விழாவில் கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், எஸ்.பி. எம்.ஷேக் அப்துல்லா, வே. உமாகாந்த், பரிதி இளம்சுருதி எம்.சி., வழக்கறிஞர் இந்திரஜித், ஆர். வரதன், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், இசட். ஆசாத்,எம்.சி., சொ.வேலு எம்.சி., பா.ஸ்ரீராமுலு எம்.சி. ,ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராஜன் எம்.சி., டி. எஸ்.பி.ராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு எம்.சி., வி. சுதாகர், எஸ்.முரளி, எஸ். ராஜசேகர் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

95அ வட்டக் கழக செயலாளர், பா.ஜானி மற்றும் பகுதி மாணவரணி அமைப்பாளர் எஸ்.எஸ். மணிகண்டன் நன்றி கூறுகிறார்கள்.


கலைஞர் 100
1924 - 2023

"புத்தகத்தில் உலகைப் படிப்போம்
உலகத்தைப் புத்தகமாய் படிப்போம்"



கலைஞர் நூற்றாண்டு நூலகம்

திறப்பு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை
திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுவார்கள்

நாள்: 15.07.2023, சனிக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: புதுநத்தம் சாலை, மதுரை




2,7 ஏக்கர் 2 இலட்சம் சதுர அடி
3,3 இலட்சம் நூல்கள்
குளிரூட்டப்பட்ட நூலகம்
மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வடிவமைப்பு
கலைக்கூடம்
சிறார் திரை அரங்கம்
சிறார் அறிவியல் கூடம்
கணினி நூற்பட்டி (OPAC)
RFID தொழில் நுட்பம் மற்றும் CCTV
மாநாட்டு அரங்கம்
Koha நூலக மேலாண்மை மென்பொருள்
குழந்தைகள் பிரிவு

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009


### பி.எஸ்.என்.எல். பராமரிப்புப்பணி!

### தொலைபேசி எண்கள் செயல்படாது!

# குடிநீர் வாரிய இணையதளம் செயல்படும்!

### சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை.15-

பி.எஸ்.என்.எல். வலைதள பராமரிப்புப் பணிகள் இன்று 15.07.2023 மாலை 3.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளதால் சென்னைக் குடிநீர் வாரிய தொலைபேசி எண்.044-2845 1300, கட்டணமில்லா தொலைபேசி எண்கள்.1916 மற்றும் 14420 செயல்படாது.

மேலும், மற்ற இணையதள சேவைகள் மற்றும் தலைமை அலுவலக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் வழக்கம்போல் செயல்படும்.

கூடுதல் விவரங்களுக்கு 4567 4567 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் அறிவித்துள்ளது.